வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 14.6.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இத்தாலியில், பிரஞ்ச் அதிபர் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்களை, இருதரப்பு ரீதியில் சந்தித்தார்.

நீட் தேர்வு மாணவர்களின் நலன்களை பாதுகாக்க, அரசு உறுதி பூண்டுள்ளதாக, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று, விஷவாயு சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ரெட்டியார் பாளையம் புதுநகர் பகுதியில், வீடு வீடாகச் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

ஜல்சக்தி அபியான் திட்டத்தை புதுச்சேரியில் செயல்படுத்துவது குறித்து மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் இன்று அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

மோடி-இத்தாலி

ஜி-7 உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இத்தாலி சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அந்நாட்டின் அப்புலியா பிராந்தியத்தில், மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, பல்வேறு நாடுகளின் தலைவர்களை இருதரப்பு ரீதியில் சந்தித்தார். பிரஞ்ச் அதிபர் திரு இமானுவேல் மேக்ரோனை பிரதமர் சந்தித்த போது, அணுமின்சாரம், விண்வெளி, பருவநிலை மாற்றம், டிஜிட்டல் பொது வசதிகள், கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்து விவாதிக்கப்பட்டது. மேக் இண்டியா திட்டத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் இருதலைவர்களும் ஒப்புக் கொண்டனர். செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு, மற்றும், ஐநா பெருங்கடல் மாநாட்டை முன்னிட்டு இத்துறைகளில் ஒத்துழைப்பை விரிவாக்கவும் இருநாடுகளும் இணைந்துள்ளன. பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு பிரதமர் இந்த சந்திப்பின் போது, பிரஞ்ச் அதிபருக்கு வாழ்த்து தெரிவித்துக் கொண்டார். தொடர்ந்து இங்கிலாந்து பிரதமர் திரு ரிஷி சுனக், உக்ரேனிய அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி ஆகியோரையும் பிரதமர் சந்தித்தார். இதர ஜி-7 நாடுகள், புறநிலை கூட்டாளி நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்களையும் இருதரப்பு ரீதியில் அவர் சந்திக்கிறார்.

*மோடி-யோகா*

10-ஆவது சர்வதேச யோகா தினம் வரும் 21-ஆம் தேதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி, திரிகோணாசனம் பற்றிய காணொளி ஒன்றை, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். திரிகோணாசனம் செய்ய வேண்டிய முறை மற்றும் இந்த ஆசனத்தின் பலன்கள் குறித்து காணொளியில் விளக்கப்பட்டுள்ளது. திரிகோணாசனம் பயில்வதால் முதுகு மற்றும் தோள்பட்டை வலுவடைந்து, மனம் ஒருமுகப்படும் என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

*ஜுயல் ஓராம்*

மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு ஜுயல் ஓராம் இன்று புதுடெல்லியில், முறைப்படி அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 3-ஆவது முறையாக அமைச்சகத்தின் தலைமை பொறுப்பை ஏற்பது தமக்கு கிடைத்த கவுரவம் என்று அவர் கூறினார். பழங்குடி மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பழங்குடி மக்களின் கல்வி மற்றும் சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்த அமைச்சகம் உயர் முன்னுரிமை அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

*நீட்-பிரதான்*

நீட் தேர்வு மாணவர்களின் நலன்களை பாதுகாக்க அரசு உறுதி பூண்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார். மாணவர்களின் எல்லா கவலைகளும் நியாயமான விதத்தில்

பரிசீலிக்கப்படும் என்றும் எந்த ஒரு மாணவருக்கும் பிரதிகூலம் ஏற்படாது என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். நீட் தேர்வு பற்றிய உண்மைகளை உச்சநீதிமன்றம் பரிசீலித்து இருப்பதாகவும் மாணவர்களின் நலன்களை பாதுகாக்க நீதிமன்ற அறிவுறுத்தலின் படி, உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்றும் அவர் கூறி உள்ளார். மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு நடைமுறைகள் விரைவில் தொடங்க உள்ளதால், குழப்பம் இன்றி, இந்நடைமுறைகளுக்கு நகர்தல் அவசியம் என்றும் அமைச்சர் வலியுறுத்தி உள்ளார். நீட் தேர்வில் நடந்ததாக கூறப்படும் முறைகேடுகள் குறித்து மாணவர்கள் விசாரணை கோரி வரும் நிலையில், மத்திய கல்வி அமைச்சரின் இக்கருத்துக்கள் வெளியாகி உள்ளன.

*நீட்-சேர்க்கை*

கேள்வித் தாள் கசிவு மற்றும் நீட் தேர்வு தொடர்பான இதர பிரச்சனை குறித்து சிபிஐ விசாரணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள பொது நலன் மனு ஒன்றின் மீது, இன்று உச்சநீதிமன்றம், மத்திய அரசு மற்றும் தேசிய தேர்வுகள் முகமையிடம் விளக்கம் கேட்டுள்ளது. சிபிஐ மற்றும் ஒடிசா அரசும் 2 வாரங்களுக்குள் பதில் அளிக்க வேண்டுமென உச்சநீதிமன்றத்தின் கோடைக்கால அமர்வு இன்று உத்தரவிட்டுள்ளது. இம்மனு மீதான விசாரணைகள், நிலுவையில் உள்ள இதர மனுக்களுடன்

சேர்த்து ஜூலை 8-ஆம் தேதி நடைபெறும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். பிரச்சனை தொடர்பாக பல்வேறு உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள எல்லா வழக்குகளையும் உச்சநீதிமன்றத்திற்கு மாற்றக் கோரி தேசிய தேர்வு முகமை தாக்கல் செய்துள்ள மனுவின் மீது, உச்சநீதிமன்றம் தனியார் தரப்பினருக்கும் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

*விஜயன்*

குவைத்தில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கவும், உயிர் இழந்தோர் உடல்களை உடனடியாக தாயகத்திற்கு எடுத்து வரவும், குவைத் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளை கேரள முதலமைச்சர் திரு பினராய் விஜயன் பாராட்டி உள்ளார். இன்று கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தீவிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குவைத் அரசு இழப்பீடு வழங்கும் என தாம் நம்புவதாகவும், இழப்பீடு பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த, மத்திய அரசை தாம் கேட்டுக் கொள்வதாகவும் கூறினார். முன்னதாக குவைத் தீவிபத்தில் உயிர் இழந்த 45 பேரின் உடல்கள் இந்திய விமானப் படையின் சிறப்பு விமானம் மூலம் இன்று காலை கொச்சி வந்து சேர்ந்த போது முதலமைச்சர் திரு பினராய் விஜயன், மத்திய அமைச்சர்கள் திரு கீர்த்தி வர்தன் சிங், திரு சுரேஷ் கோபி

உள்ளிட்டோர், விமான நிலையத்தில் வைத்தே இறுதி அஞ்சலி செலுத்தினர். 45 பேரின் உடல்களில், கேரளா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகத்தைச் சேர்ந்த 31 பேரின் உடல்கள், ஆம்புலன்ஸ் மூலம் அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதர 14 பேரன் உடல்களை விமானம் மூலம் டெல்லிக்கு எடுத்துச் சென்று அங்கிருந்து அவரவர் சொந்த மாநிலங்களுக்ககு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

*ராதாகிருஷ்ணன்*

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று, விஷவாயு சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ரெட்டியார் பாளையம் புதுநகர் பகுதியில் வீடு வீடாகச் சென்று ஆய்வு மேற்கொண்டார். தவறு செய்த அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையில் மருத்துவமனை மற்றும் தொழிற்சாலை கழிவுகள் கலப்பதாக தெரிய வந்தால் அவர்கள் மீதும் நடவடிக்கை பாயும் என்றும் துணை நிலை ஆளுநர் கூறினார் தேவைப்பட்டால் வெளிமாநில நிபுணர்களை வரவழைத்து இப்பகுதி முழுவதும் ஆய்வு செய்யப்படும் என்றும்,. கழிவு நீர் சுத்திகரிப்பு மையங்களில் பாதுகாப்பு குறைபாடுகள் இருந்தால் உடனுக்குடன் சரி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இதற்கு தேவையான

நடவடிக்கைகள், இன்று மாலை நடைபெற உள்ள கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

*ஜல்சக்தி*

மத்திய அரசின் ஜல்சக்தி அபியான் திட்டத்தை புதுச்சேரியில் அமல்படுத்துவதற்கான செயல் திட்டத்தை தயாரிப்பது குறித்து மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் இன்று அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். நீர் நிலைகளை தூர்வாருதல், நீர் நிலைகளைச் சுற்றி உள்ளப் பகுதிகளில் காடுகளை வளர்த்தல், பயன்பாட்டில் இல்லாத ஆழ்துறை கிணறுகளை மீட்டுருவாக்கம் செய்தல் மற்றும் இதர அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப் பட்டது. உள்ளாட்சித் துறை இயக்குநர் திரு சக்திவேல், புதுச்சேரி நகராட்சி ஆணையர் திரு கந்தசாமி, கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள், மற்றும், சம்பந்தப்பட்ட இதர துறைகளின் மூத்த அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி-சிவில் சர்வீஸ்*

யுபிஎஸ்சி முதனிலை சிவில் சர்வீஸ் தேர்வுகள் வரும் 16-ஆம் தேதி புதுச்சேரியில் 7 மையங்களில் நடைபெற உள்ளன. முத்தியால்பேட்டை பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி, லாஸ்பேட் மகளிர் பொறியியல் கல்லூரி, செல்லபெருமாள் பேட் விவேகானந்தா மேல்நிலைப் பள்ளி ஆகிய மையங்களும் இதில் அடங்கும். இவ்வாண்டு புதுச்சேரியில், சிவில் சர்வீஸ்

முதனிலை தேர்வு எழுத, 2 ஆயிரத்து 578 பேர் விண்ணப்பித்துள்ளனர். இத்தேர்வை சிறந்த முறையில் நடத்த புதுச்சேரி அரசு பாதுகாப்பு உட்பட அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது. தேர்வர்கள் தேர்வு மையத்திற்கு சென்று திரும்ப ஏதுவாக, வரும் 16-ஆம் தேதி காலை-மாலை இருவேளையும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில், சிவில் சர்வீஸ் முதனிலை தேர்வுக்கான கட்டுப்பாட்டு அறை செயல்படும் என்றும், தேர்வர்கள், 22 07 201 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு, தேவையான விளக்கங்களைப் பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*ஸ்டாலின்*

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் பயின்று கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு, வரும் ஆகஸ்டு மாதம் முதல் ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்க, தமிழ்ப் புதல்வன் திட்டம் தொடங்கப்படும் என முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னையில் இன்று நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் உரையாற்றிய அவர், மாநிலத்தில் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேம்படுத்தி வருவதாக கூறினார். வகுப்பறைகளை வண்ண மயமாக்கும் வகையில் ஸ்மார்ட் போர்டு திட்டம் செயல்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தமிழக மாணவர்கள் உலக அளவிலான சவால்களை எதிர்கொள்ள தேவையான வசதிகளை அரசு உருவாக்கி வருவதாக முதலமைச்சர் மேலும் கூறினார்.

இடைத் தேர்தல்

தமிழகத்தின் விக்கிரவாண்டி உட்பட, 7 மாநிலங்களில் காலியாக உள்ள 13 சட்டமன்ற தொகுதிகளுக்கு ஜூலை 10-ஆம் தேதி நடைபெற உள்ள இடைத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடங்கி உள்ளது. வரும் 21-ஆம் தேதி வரை வேட்பு மனுக்களை தாக்கல் செய்யலாம் என்றும் ஏற்கப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 26-ஆம் தேதி கடைசி நாளாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை 10-ஆம் தேதி இடைத் தேர்தலில் பதிவான வாக்குகள் ஜூலை 13-ஆம் தேதி எண்ணப்படும். விக்கிரவாண்டி தொகுதியில் திமுக சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி உடல் நலக் குறைவினால் காலமானதைத் தொடர்ந்து இத் தொகுதிக்கு இடைத் தேர்தல் நடத்தப்படுகிறது.

*மீன்பிடி தடை*

புதுச்சேரியில் 64 நாள் மீன்பிடி தடைக்காலம் முடிந்து விட்டதைத் தொடர்ந்து, மீனவர்கள் இன்று முதல், மீண்டும் மீன்பிடிக்க கடலுக்குள் சென்றுள்ளனர். மீன்பிடி தடைக் காலத்தில் முற்றிலும் பழுதுபார்த்து தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த விசைப் படகுகள் மீண்டும் இயங்கத்

தொடங்கி உள்ளன. முன்னதாக புதுச்சேரி அரசு சார்பில் , மொத்தம் 18 ஆயிரத்து 298 மீனவர்களுக்கு, தலா 6 ஆயிரத்து 600 ரூபாய் மீன்பிடி தடைக்கால நிவாரணம் வழங்கப்பட்டது. காரைக்கால் மற்றும் ஏனாம் பிராந்தியங்களிலும் மீனவர்கள் இன்று முதல் மீண்டும் கடலுக்குள் செல்ல தொடங்கி உள்ளனர்.

*வானிலை*

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, வரும் 20-ஆம் தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, மத்திய வங்க கடல், வடகிழக்கு வங்க கடல் மற்றும் அரபிக் கடலின் மத்திய பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் வரும் 18-ஆம் தேதி வரை இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக மகாபலிபுரம், செய்யாறு, ஆரணி உள்ளிட்ட இடங்களில் தலா 2 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*திரைப்பட விழா*

மும்பை சர்வதேச திரைப்பட விழா இம்மாதம் 15- முதல் 21-ஆம் தேதி வரை சென்னையில் நடைபெற உள்ளது. இவ்விழா, மும்பைக்கு வெளியே

சென்னை, கல்கத்தா, டெல்லி மற்றும் புனேயிலும் நடைபெறுவது இதுவே முதல் முறை என்று தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் மண்டல தலைவர் திருமதி ரோகிணி கவுதமன், இன்று ஆகாஷ்வாணி செய்தியாளருக்கு அளித்த பிரத்யேக பேட்டியில் தெரிவித்தார். திரைப்பட ரசிகர்கள் மற்றும் திரைப்பட கலை பயிலும் மாணவர்களின் ரசனைக்கான சிறந்த மேடையாக இத்திரைப்பட விழா அமையும் என்றும், இந்தியா மற்றும் சர்வதேச அளவிலான திரையுலக பிரபலங்களுடன், கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இத்தாலியில், பிரஞ்ச் அதிபர் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்களை, இருதரப்பு ரீதியில் சந்தித்தார்.

நீட் தேர்வு மாணவர்களின் நலன்களை பாதுகாக்க, அரசு உறுதி பூண்டுள்ளதாக, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று, விஷவாயு சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ரெட்டியார் பாளையம் புதுநகர் பகுதியில், வீடு வீடாகச் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

**ஜல்சக்தி அபியான்** திட்டத்தை புதுச்சேரியில் செயல்படுத்துவது குறித்து மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் இன்று அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------